# “மானமிகு ஆசிரியர்” நீடு வாழ்க!



"முடியும்வரை கடமைகளைச் செய்வேன்!"
என்றே
முழுவீச்சில் இறங்குகின்றார்! மூச்சு நின்று
"மடியும்வரை ஓய்வில்லை பணியில்!" என்றே
மானமிகு ஆசிரியர் முழங்கு கின்றார்!
"இடியும்வரை, ஆதிக்கத் தடைச்சு வர்கள்
இல்லாமல் போகும்வரை, எனது தாய்மண்
விடியும்வரை என்தொண்டு தொடரும்!" என்றே
விடுத்தார்!போர்ப் பிரகடன அறிக்கை நன்றே!

போகிறது காலநதி புதுவே கத்தில்!
பொறுப்பேற்றுக் கருஞ்சட்டைப் படைந டத்தி
ஆகிறது மூத்தமுதிர் வயதென் றாலும்
அழகுகுன்றா இளமையுடன் சுழலு கின்றார்!
சாகிறது சனாதனநோய்க் கிருமி யெல்லாம்!
சமர்புரியும் "ஆசிரியர்" சக்தி கண்டே
வேகிறது வெறிப்பகைவர் நெஞ்ச மெல்லாம்!
"வீரமணி" ஒலிக்கிறதே தமிழ்நா டெங்கும்!

நெற்றிக்கண் பழமைகளை ஞானக் கண்ணின்
நெருப்பாலே சுட்டெரித்தார் பெரியார்! அந்த
வற்றாத பகுத்தறிவுக் கனலை ஏந்தி
வலம்வரும்நம் "ஆசிரியர்" எட்டுத் திக்கும்
சுற்றித்தன் பரப்புரையை நிகழ்த்து கின்றார்!
சுயமரியா தைப்பயணம் நடத்து கின்றார்!
வெற்றிக்கு மறுதொடக்கம்! சமூக நீதி
விடுதலைக்குப் பூபாளம் அவர்மு ழக்கம்!

வளமார்ந்த கருத்துக்கள்! தெளிந்த சொற்கள்!
வாதத்தில் அனல்கக்கும் ஆதா ரங்கள்!
உளமார்ந்த கொள்கையைஉள் வாங்கிக்
கொண்டே
உலாவரும் "தாடியில்லாப் பெரியார்" இன்றும்
களமாடி வருகின்றார் உரிமைப் போரில்!
கலைஞர்வழி நடைபோடும் நல்லாட் சிக்கோர்
இளம்வீரன் தினவைப்போல் தோள்கொ டுத்தே
"இனமானத் தளபதி"க்குத் துணைநிற் கின்றார்!

பட்டுமலர் விரிப்பல்ல! கடந்து வந்த
பாதையெங்கும் விஷமுட்கள்! வசைக்கூச் சல்கள்!
அட்டணக்கால் இருக்கைதரும் வரவேற் பல்ல!
அழுகியவீண் முட்டையுடன் அமில வீச்சு!
விட்டொதுங்கிப் போகவில்லை எதிர்ப்பைக்
கண்டே!
"வெண்தாடிச் சூரியனின்" படையில், உச்சம்
தொட்டு,அகவைத் "தொண்ணூற்றி இரண்டும்"
தொட்டார்!
" தொண்டுசெய்து பழுத்தபழம்" இவரும் ஆனார்!

எண்ணத்தை நிறைவேற்றிப் பெரியார் கண்ட
இயக்கத்தின் வழிகாட்டி அரைநூற் றாண்டாய்!
விண்முட்ட இனமானம் எதிரொ லிக்கும்
"விடுதலைக்கே" ஆசிரியர் அறுப தாண்டாய்!
கண்மூடி வழக்கத்தைத் தகர்த்துப் போடும்
கருத்தியற் கோட்பாட்டில் எண்ப தாண்டாய்!
நுண்ணோக்கும் அறிவாளர்! தொண்ணூ
றென்ன?
நூறாண்டும் இவர்திகழ்வார் இளைஞ ராக!

கடலூரி லேபிறந்து, தமிழி னத்தின்
காவலராய் "திடலூரில்" எழுந்த கோமான்!
உடலேற்றுக் கொள்ளாத மூப்பென் றாலும்
ஓய்வுக்கே ஓய்வுதரும் உழைப்புச் செம்மல்!
அடலேறு சலியாத வினைத்திட் பத்தில்!
அஞ்சாத சினவேங்கை அறச்சீற் றத்தில்!
வடலூரின் அடுப்பைப்போல் சுடர்குன் றாமல்
வளர்ந்துவரும் கொள்கைத்தீ! வாழ்க! வாழ்க!

பாழடைந்த தமிழ்நாட்டைப் புதுப்பிக் கின்ற
பணியில்நம் "முதல்வருடன்" கைகள் கோர்த்துத்
தோழமையின் ஆளுமையை வழங்கி வாழ்க!
துள்ளலுடன் துடிப்புடனே இயங்கி வாழ்க!
வாழ்க!எங்கள் "ஆசிரியர்" நீடு வாழ்க!
வருங்காலப் பொன்னேட்டு வரலாற் றுக்குத்
தாழ்திறந்த பெருமகனார் இனிது வாழ்க!
தாய்க்கழகப் பெருமையுடன் தமிழ்போல் வாழ்க!!

கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**



---

## எழும்பூர் தொகுதி

# 61, 77 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் மழை நீரை வெளியேற்றும் பணி!

### இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. ஆய்வு - 600 பேருக்கு மதிய உணவு வழங்கினார்

சென்னை,டிச.2-

கழகத் தலைவரும் முதல மைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஃபெஞ்ஜல் புயல் மழையை எதிர்கொள்ள அளித்துள்ள வழிகாட்டுதலின்படி, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்ட மன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்கள் 61, 77குட்பட்ட பகுதிகளில் மழை நீரை வெளியேற்றும் பணிகளை ஆய்வு செய்ததோடு, தனது ஏற்பாட்டில் 600 பேருக்கு மதிய உணவு வழங்கினார். எழும்பூர் தொகுதி, வார்டு எண்.61, ஆராவமுதன் கார்டன் பகுதியில் 25 ஹெச்.பி. திறன் கொண்ட டிராக்டர் மோட்டார் மூலம் மழை நீர் வெளியேற்றப்படும் பணியினையும்;

வார்டு எண்.77க்குட்பட்ட தட்டாங்குளம், முனுசாமி தெரு, காட்டூர் நல்லமுத்து தெரு, டிமலஸ் சாலை, மோதிலால் தெரு, பழைய ஆட்டுத் தொட்டித் தெரு ஆகிய பகுதிகளில் மழை நீரை வெளியேற்றும் பணிகளையும் மற்றும் முனுசாமி கால்வாயில் 350 ஹெச்.பி. திறன் கொண்ட மோட்டார் மூலம் மழை நீர் வெளியேற்றப்பட்டு வருவதையும் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் மாநகராட்சி அதிகாரிகளோடு ஆய்வு செய்தார். மேலும், வார்டு எண்.77 க்குட்பட்ட தட்டாங்குளம் ஆதி ஆந்திரா பகுதி, முனுசாமி தெரு, காட்டூர் நல்லமுத்து தெரு, டிமலஸ் சாலை, மோதிலால் தெரு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 600 பேருக்கான மதிய உணவினை சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் ஏற்பாடு செய்து வழங்கினார்.

இவ்வாய்வுகளின்போது எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் உடனிருந்தனர்.

---

## இன்று

# திராவிடர் கழகத் தலைவர் - ஆசிரியர் கி.வீரமணி 92வது பிறந்த நாள்!



**திராவிடர் கழகத் தலைவர் - ஆசிரியர் கி.வீரமணி அவர்களுக்கு, இன்று (02.12.2024 - திங்கள் கிழமை) 92 வது பிறந்த நாளாகும்!**

---

## தந்தை பெரியாரின் வாழ்நாள் மாணவன் நான்!

# தொண்டு செய்து கிடப்பதே எம் பணி!

### 92வது பிறந்த நாளையொட்டி – திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

**சென்னை, டிச.02**

**தந்தை பெரியாரின் வாழ்நாள் மாணவனாகிய எனக்கு வயது ஒரு தடையில்லை; எம் பணி- பெரியார்தம் தொண்டு செய்து கிடப்பதே என் வாழ்நாள் பணி என்று உறுதி கூறுகிறேன் என்று தம் பிறந்த நாள் செய்தியாகத் தெரிவித்துள்ளார் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்.**

**அவரது பிறந்த நாள் அறிக்கை வருமாறு:**

இன்று (2.12.2024) எனக்கு 92 ஆம் ஆண்டு பிறக்கிறது.

‘பத்து வயது பகுத்தறிவுச் சிறுவனாக’ மேடை ஏற்றப்பட்டு, பொதுவாழ்க்கை என்ற தீரா நதியில் இறக்கிவிடப்பட்டு, எதிர்நீச்சல் போட்டியில், எம் தலைவரை யொட்டி அவரது பயிற்சிப் பாசறையின் பயனுறு பாடத்தால், 82 ஆண்டுகள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, எத்தனையோ எதிர்ப்பு, ஏளனங்கள், அடக்குமுறைகள், சிறைவாசங்கள், உயிர்க்குறிகளைச் சந்தித்தும், கொள்கையில் துவளாது, நாணயத்திலிருந்து வழுவாது, எதிரிகளிடம் கொள்கையில் சமரசம் செய்து கொள்ளாத உறுதி கொண்ட நெஞ்சினனாய் நான் தொடருவதன் ரகசியம், பெரியார் தந்த புத்தியும், அய்யாவிடம் கற்ற பாடங்களும், கழகக் கொள்கை உறவுகளின் வற்றாத பாசமும்தான்!

**கட்டுப்பாட்டுக் கூடாரத்தின் காவல் சிப்பாய்!**

இன எதிரிகள் - கொள்கை எதிரிகளின் இடையறாத எதிர்ப்புகளாலும் எனது பொதுவாழ்வு - எனக்கு, சலிப்பையோ, சங்கடத்தையோ, விரக்தியையோ, நம்பிக்கையின்மையையோ ஒருபோதும் தந்ததே இல்லை.

சிற்சில நேரங்களில், வயதின் வளர்ச்சி என்ற முதுமையின் காரணமாக உடல் உறுப்புகளின் ஒத்துழையாமை ஏற்படக்கூடும்.

அவற்றை உடலில் தீர்க்க அருமையான நமது மருத்துவப் பெருமக்களும், உள்ளத்தால் போக்க குருதிக் குடும்பம் தொடங்கி, கொள்கைக் குடும்பமும் என்றும் என்னைத் தோள் கொடுத்துத் தாங்குகின்றன.

தாக்குதல்கள் மலைபோன்று வந்தாலும், நொடியில் நம் மன உறுதிமுன், பனிபோல் கரைந்து, கழிவு நீர் போல் ஓடி மறைகிறது.

காரணம், நான் ஒரு பெரியார் இராணுவம் என்ற ஒரு கட்டுப்பாட்டுக் கூடாரத்தின் காவல் சிப்பாய்! சபலங்களுக்கு இடம்தராத சாதாரண தொண்டன்.

தந்தை பெரியாருக்குப் பின் இயக்கமே இருக்காது என்று ஆரூடம் கணித்த அவசர அரைவேக்காடு அரசியல் எதிரிகளும், இன எதிரிகளும் எப்படி குழிவெட்டலாம் என்று கூடி, குறுக்கு வழிகளைத் தேடி, ஓடி, அபாண்டங்களைப் பொழிந்து அழித்துவிடலாம் என்று நாளையும் திட்டம் தீட்டக் கூடும்.

**நீதிக்கட்சி முதல் ‘திராவிட மாடல்’ ஆட்சிவரை!**

‘நீதிக்கட்சி’ என்ற பார்ப்பனரல்லாதார் இயக்கம் பிறந்து, சுயமரியாதை இயக்கமாக மலர்ந்து, திராவிடர் கழகமாய் விரிந்து, பண்பாட்டுப் பாதுகாப்புக்கான மனிதநேய இயக்கமாய் ஓங்கி, அரசியலில் ‘திராவிட மாடல்’ என்ற ஒரு பெருமைமிகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினை பெற்று அகிலத்திற்கே எடுத்துக்காட்டாய்த் தந்து, ஓங்கி வளர்ந்து, உத்தமர்களின் பாராட்டைப் பெற்று வளரும் திராவிட இயக்கமாகப் பூத்துக் குலுங்குகிறது. வேரும், விழுதுகளும் பலமாகி விரிந்து பரந்து, ஆழ்ந்து பெருத்துள்ளது.

அதன் கனிகளை உண்ணுவோர் பலருக்கு அதற்காக உழைத்த வில்லேருழவர்களும், சொல்லேருழவர்களும், செயல் திட்ட அரசியல் மேதைகளும், தந்தை பெரியார் என்ற மாபெரும் அறிவுச் சுடர் தந்த அற்புதக் கொள்கைச் சிற்பியுமே அதன் பாரம்பரிய சொத்து என்பது தெரியாமல் இருக்கலாம்.

டாக்டர் சி.நடேசனார், சர்.பி.டி. தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர், பானகல் அரசர், ஏ.டி.பன்னீர்செல்வம் போன்ற நீதிக்கட்சித் தலைவர்களோடு, சுயமரியாதை இயக்கம் கண்ட புரட்சியாளர் தந்தை பெரியாரின் சகாப்தமும் இணைந்து ‘திராவிடர் கழகமாக’ வளர்ந்து, அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என்ற அரசியல் ஆளுமைகளாலும், அதன் நீட்சியாக இன்று ‘திராவிட மாடல்’ ஆட்சியின் ஒப்பற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி நீண்டு வரலாற்று வைர வரிகளாக மின்னுகிறது.

**எவரோடும் முடிந்துவிடக் கூடிய இயக்கமல்ல இது!**

தந்தை பெரியார்தம், தாய்க்கழகத்தின் திட்டங்களும், கொள்கைகளும் திராவிடர் ஆட்சிமூலம் அரும் சட்டங்கள் ஆகி, புதியதோர் விடியலை, புத்தாக்க சமூகத்தை உருவாக்கி பொற்காலத்தைத் தந்து வருகின்றது.

‘அவரோடு சரி!’, ‘இவரோடு சரி!’ என்ற அவசர ஆத்திரக்காரர்களுக்கு, ‘எவரோடும் முடிந்துவிடக் கூடியதல்ல!’ இது வேரற்ற அடிமரம் அல்ல; வெளித் தெரியாமல் ஆழமாக வேர் பதிந்துள்ள வித்தக வினைக்கான விளைச்சல் மரம் திராவிடம் என்பது நாளும் புரிய வைக்கப்படுகிறது.

ஆனால், இன்றைய ஆட்சியை நேரிடையாக எதிர்க்கத் தெம்பில்லாதோர் வம்பர்களை வரவழைத்து, சில கூலிப் படைகளிடம் பேரம் பேசி, ‘பி’, ‘சி’, ‘டி’ டீம்களை எல்லாம் நிற்க வைக்கின்றனர் - நம் கொள்கை எதிரிகள். ‘சிலிப்பர் செல்கள்க’ளை அனுப்புகிறோம் என்று வெட்கமின்றி உளறுகின்றன - செல்லரித்த செலவாகாத சில்லரைகள்.

1. இயக்கத்தில் எம் பணி, நம் மக்களை என்றும் பாதுகாக்கும் இராணுவப் பணி போன்றது.

2. கொள்கைகளை நாளும் பரப்பிவரும் ஒப்பற்ற ‘திராவிட மாடல்’ ஆட்சியை மீண்டும் அங்கே வெற்றிப் பொலிவுடன் அமர்த்துவது!

3. ஜாதி, தீண்டாமை, பெண்ணடிமை, மூடநம்பிக்கை களை ஒழித்து சமூகநீதி, அறிவியல் மனப்பான்மை தழைக்கும் புதிய சமுகமாக்குவது.

4. இளைஞர், மகளிர் முதலிய அனைத்துத் தரப்பினரும் பிரச்சாரப் பணியை சுழன்றடிக்கும் சுனாமியாக உழைத்திட வைக்கும் பணியே, எம் பணி!

5. அகால பருவ மாற்றங்களைத் தவிர்க்க, சுற்றுச்சூழல் பாதுகாப்பினை மக்கள் இயக்கமாக நடத்துவது!

முடியும்வரை அதே பணி எம் பணி!

ஆம், எம் வாழ்வு முடியும்வரை, எம் உடலுறுப்புகள் செயல்படும்வரை இப்பணி தவிர வேறு எப்பணி எமக்கு? அதுவே “திருப்பணி” நமக்கு.

எமக்குத் தோள் கொடுத்துள்ள தலைவரின், ஈரோட்டுப் பாதை எமது மாறாப் பாதை, ஒரே பயணப் பாதை!

அந்த ஈரோட்டுப் பாதை, பாதை இல்லா ஊர்களுக்கும்கூட புதிய பாதையமைத்து இணைக்கும் ஒரே சீரான பாதை!

பாறைகள் உருண்டாலும், மண் சரிந்தாலும், எதிர்கொண்டு வெல்லும் உறுதியே 92 ஆம் ஆண்டு காணும் இந்த எளிய பெரியார் தொண்டனின் இன்ப உணர்வின் இனிய முழக்கமாகும்!

என் 92 ஆம் ஆண்டில், ‘தி மாடர்ன் ரேஷனலிஸ்ட்’ ஆண்டு மலரில், வாழ்த்து அனுப்பிய நமது ஒப்பற்ற முதலமைச்சர் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மானமிகு மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சியில், கோவையில், கலைஞர் நூற்றாண்டையொட்டி - ரூ.300 கோடி செலவில் அமைக்கப்படும் தந்தை பெரியார் நூலகம், அறிவியல் மய்ய முமே எனக்குப் பிறந்த நாள் பரிசு என்று எழுதியுள்ளது என் கண்களைப் பனிக்க வைத்தது! உள்ளத்தை உருக்கியது!!

வைக்கம் தந்தை பெரியார் நினைவகம் திறப்பு விழா நிகழ்ச்சிகளும் கூடுதல் பரிசுதானே! இந்தப் பரிசுகள்முன் மற்றவை எம்மாத்திரம்!

இப்பரிசுகள் எனக்கு மட்டும் உரியவையல்ல - திராவிட சமுதாயத்திற்கே உரியவை!

நன்றி! நன்றி!! நன்றி!!!

‘திராவிட மாடல்’ ஆட்சி நாயகர் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் “தாய்க்கழகமான திராவிடர் கழகமும், பெரியார் திடலும்தான் எனது ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு வழிகாட்டியாய், பாதுகாப்பு அரணாய், கேடயமாய் இருக்கிறது. கொள்கை வழிகாட்டியாக இருப்பவர் ஆசிரியர் வீரமணிதான்- இதைத்தான் நேற்றும் சொன்னேன். இன்றைக்கும் சொல்கிறேன். நாளைக்கும் சொல்வேன்” என்று சொல்லியிருப்பது இயல்பான திராவிடப் பாரம்பரிய அரசியல் வழிமுறைதான்!

“மானமிகு சுயமரியாதைக்காரர்” நூற்றாண்டு விழா நாயகர் நம் கலைஞர் அவர்களே முன்பு இதற்கு அருமையான விளக்கம் தெரிவித்தாரே!

“(ஆரிய) பாம்புக்கும், (திராவிட) கீரிக்கும் நடக்கும் சண்டையில், கடிபட்ட கீரி, தன் புண்ணை ஆற்றிக் கொள்ள ஒரு பச்சிலைமீது படுத்துப் புரண்டு, அக்காயத்திற்கு மருந்தாக - விஷ முறிவை ஏற்படுத்திக் கொள்ளும் என்பார்கள்; அதுதான் நாங்கள் பெரியார் திடலுக்குச் செல்வது; அங்கேதான் அந்த சுயமரியாதை மூலிகைத் தோட்டம் உள்ளது” என்று அருமையாக விளக்கினார்.

அறிஞர் அண்ணா ஆட்சி அமைந்த காலத்திலிருந்தே வந்த அரசியல் பாரம்பரியமாயிற்றே! அதனை அடிபிறழாது பின்பற்றி ஆட்சியை நடத்திவரும், ‘திராவிட மாடல்’ ஆட்சி நாயகரின் தெளிவான அரசியல் முதிர்ச்சிக்கான சான்றாவணம் ஆகும் இது!

நமக்கு வளமைபற்றிக் கவலை இல்லை. களத்தில் என்றும் நிற்க இளமைதானே என்றும் தேவை?

**அனைத்துத் தோழர்களுக்கும் – எம் மக்களுக்கும் எனது உறுதி! உறுதி!!**

இயக்கப் பணி என்ற இந்த ஒப்புவமையற்ற, நன்றியை எதிர்பாரா, மானம் பாராத, புகழ் நோக்காது புது உலகப் படைப்புக்கு நமது உழைப்பு என்பது சிறு துளியே! ‘பெரியார் உலகம் மயம் - உலகம் பெரியார் மயம்’ பெருவெள்ளமாவது என்ற இலக்கே நமது களம்.

சிறுகனூரில் உருவாகிக் கொண்டிருக்கும் “பெரியார் உலகம்” நமது அடுத்த பெரும்பணி! அதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் கனிவுடன் வேண்டுகிறேன்.

அதை நோக்கியே இனியும் நம் பணி என்ற பெரும் பணி!

‘வாழ்க, ஒழிக!’ என்பதை ஒரே தட்டில் பார்த்து, அலட்சியப்படுத்தி அரும் பணி என்றும் தொடரும்!

அறிவியக்க வீரர்கள் அல்லவா, நாம்?. எனக்கு வயது ஏறுவதன் காரணமாக உடல் தளர்ச்சி ஏற்படலாம்; அது தவிர்க்க இயலாதது.

ஆனால், பெரியாரின் வாழ்நாள் மாணவனான எனக்கு, உள்ளத் தளர்ச்சியோ, கொள்கை சறுக்கலோ ஒருபோதும் ஏற்படவே, ஏற்படாது என்று அனைத்துத் தோழர்களுக்கும், எம் மக்களுக்கும் பணிவுடன் உறுதி கூறுகிறேன்.

வாழ்க பெரியார்! வளர்க சுயமரியாதை உலகு!

“திராவிடம் வெல்லும் - அதை என்றும் வரலாறு சொல்லும்!”

இவ்வாறு தமது அறிக்கையில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---


# 24-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

## வறுமையில் நேர்மை! வளமையில் எளிமை!!

டிசம்பர் 02 2023



# N.V.வீரய்யன் INA அவர்கள்

நகர தி.மு.க மு.அவைத் தலைவர்
நகரமன்ற மு.உறுப்பினர்
வர்த்தகர் சங்க மு.தலைவர்

...நீங்கா நினைவுகளுடன்...

**வீரா.கணேசன்** B.Com.,
நகர கழகச் செயலாளர்,
மன்னார்குடி.

**வீரா.கதிரவன்** M.A., M.L.,
மூத்த வழக்குரைஞர்,
அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்
உயர்நீதிமன்றம் - மதுரை.


---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# பி.என். பெரியண்ணன்

### டிசம்பர் 1 (2009)



**தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்டக் கழகச் செயலாளராகவும், பின்னர் தருமபுரி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**பென்னாகரம் ஒன்றிய கவுன்சிலர், பென்னாகரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றியவர்.**

**“அடக்கமும், அமைதியும் வாய்ந்தவர். எதற்கும் அதிர்ந்து பேசமாட்டார். கழகத் தோழர்களிடம் அன்பாகப் பழகி அனைவரையும் கட்டுக்கோப்பாக வைத்திருந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**